

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.11.2024) கோயம்புத்தூரில், கோயம்புத்தூர் தங்கநகை தயாரிப்பாளர்கள் சங்கம், கோயம்புத்தூர் தங்க நகைக்கடை சங்கம், தங்கபொன் சங்கம் (Gold Bullion's Association), கோயம்புத்தூர் பொற்கொல்லர் கவுன்சில், கோயம்புத்தூர் கைவினைஞர்கள் தங்கநகை தயாரிப்பாளர்கள் சங்கம் போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அனைத்து வசதிகளுடன் கூடிய தங்க நகை தொழில் பூங்கா அமைத்து தர வேண்டும் என்றும், பொற்கொல்லர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ந்திட உதவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர். இந்த நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், தொழில் வணிகத்துறை ஆணையர் நிர்மல்ராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தங்களின் பல்வேறு கோரிக்கைகளை எடுத்துரைத்தனர்!

# கோவை தங்க நகை கைவினைஞர்கள் - முதல்வரைச் சந்தித்தனர்!

## தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்திடுமாறு — முதல்வரிடம் கோரிக்கை மனு!

**கோவை, நவ.7 -**

**கோயம்புத்தூர் தங்கநகை கைவினைஞர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் மனுக்களை அளித்தனர்.**

அதன் விபரம் வருமாறு :-

கோயம்புத்தூர், தங்க நகை சார்ந்த கைவினைப் பொருட்களுக்கு புகழ்பெற்றது மட்டுமல்லாமல் இக் கைவினைப் பொருட்களின் தனித் தன்மையின் காரணமாக உள்நாடு மற்றும் வெளிநாடுச் சந்தைகளில் அதிகம் விரும்பப்படுகிறது. இங்கு சுமார் 2,000 முறையான நகை தயாரிப்புக் கூடங்கள் மற்றும் சுமார் 40,000 வீட்டிலேயே அமையப்பெற்ற நகை தயாரிப்புக் கூடங்கள் செயல்பட்டு, அவற்றின் வாயிலாக 1,50,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். பெரும்பாலான கூடங்கள் பாதுகாப்பின்மை, உற்பத்தி அளவை அதிகரிப்பதற்கான முறையான கடன் பெறுவதில் சிரமம், சோதனை வசதியின்மை போன்ற சிக்கல்களை எதிர்கொள்கின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் (5.11.2024) கோயம்புத்தூரில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, கோயம்புத்தூர் தங்கநகை தயாரிப்பாளர்கள் சங்கம், கோயம்புத்தூர் தங்க நகைக்கடை சங்கம், தங்கபொன் சங்கம் (Gold Bullion's Association), கோயம்புத்தூர் பொற்கொல்லர் கவுன்சில், கோயம்புத்தூர் கைவினைஞர்கள் தங்கநகை தயாரிப்பாளர்கள் சங்கம், சான்றளிக்கப்பட்ட பொற்கொல்லர் சங்கம். தமிழ்நாடு விஸ்வகர்மா பேரவை, சுவாமி விவேகானந்தா கலாச்சார சங்கம், டைமண்ட் இந்தியா, ராயல் பெங்கால் சங்கம், டி.எம்.கே. தங்க நகை உற்பத்தியாளர்கள் மற்றும் அனைத்து தொழிலாளர் நல சங்கம். கோயம்புத்தூர் பொற்கொல்லர் சங்கம், தென் மாவட்ட மாநாட்டு வகுப்பு தமிழ் விஸ்வகர்மா உறவின்முறை சங்கம், கோவை மாவட்ட தங்கநகை கூலி தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அனைத்து வசதிகளுடன் கூடிய தங்க நகை தொழில் பூங்கா அமைத்துத் தர வேண்டும் என்றும், பொற்கொல்லர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ந்திட உதவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு பல்வேறு கோரிக்கை கள் அடங்கிய மனுக்களை அளித்தனர்.

கோரிக்கை மனுக்களை பெற்று கொண்ட முதலமைச்சர் அவர்கள், தங்கநகை தயாரிக்கும் கைவினைஞர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோயம்புத்தூர், தர்மராஜா கோயில் வீதி, கெம்பட்டி காலனியில் உள்ள தங்கநகை தயாரிப்புப் பட்டறைகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, பொற்கொல்லர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது கோவை தங்கநகை தயாரிப்பாளர்கள் கூட்டு குழுமத்தின் தலைவர் ரகுநாதன் சுப்பையா, முதலமைச்சர் அவர்களிடம், பொற் கொல்லர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் தேவை யான உதவிகளைச் செய்திடுமாறு கோரிக்கை விடுத்தார். அவர்களது கோரிக்கைகள் குறித்துக் கேட்டறிந்த முதலமைச்சர் அவர்கள், நம்பிக்கையுடன் இருங்கள், அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், தொழில் வணிகத்துறை ஆணையர் நிர்மல் ராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர வாரியாக

# வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, சங்ககிரி, மேட்டூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பாக நிலை முகவர்கள் (BLA -2) ஆலோசனைக் கூட்டம் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், தொகுதி பார்வையாளர்கள் எடப்பாடி தொகுதி - திருமதி. நாமக்கல் ப.ராணி, மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர், சங்ககிரி தொகுதி - ஆர்.பி.செந்தில்குமார், மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர், மேட்டூர் தொகுதி - திருமதி. அ.ரியா மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| | | மேட்டூர் தொகுதி | |
|---|---|---|---|
| **தேதி** | **நேரம்** | **ஒன்றியம் / நகரம்** | **இடம்** |
| 07.11.2024 | காலை 9.00 | கொளத்தூர் ஒன்றியம் | கே.பி.என். மில் வளாகம், கொளத்தூர் |
| 07.11.2024 | காலை 11.00 | மேட்டூர் நகரம் | முகமது அலி விளையாட்டு கூட்ட அரங்கம், பியர்ட்செல் கார்டன், மேட்டூர் - 1. |
| 07.11.2024 | மதியம் 3.00 | நங்கவள்ளி ஒன்றியம் | சமத்துவபுரம் சமுதாயக்கூடம், கோனூர். |
| 07.11.2024 | மாலை 4.00 | மேச்சேரி ஒன்றியம் | பசுபதிஸ்வரர் மஹால், மேட்டூர் மெயின்ரோடு, மேச்சேரி. |
| | | **எடப்பாடி தொகுதி** | |
| 08.11.2024 | காலை 9.00 | எடப்பாடி நகரம் | டி.எஸ்.எம்.பாஷா, நகர செயலாளர் இல்லம், நைனாம்பட்டி. |
| 08.11.2024 | காலை 10.30 | கொங்கணாபுரம் ஒன்றியம் | சண்முகா ஜின்னிங் பேக்டரி, மேல் மில், மொரம்புகாடு. |
| 08.11.2024 | மதியம் 12.00 | நங்கவள்ளி ஒன்றியம் & மேச்சேரி ஒன்றியம் | ரங்கண்ணா திருமண மண்டபம், வனவாசி. |
| 10.11.2024 | மாலை 4.00 | எடப்பாடி ஒன்றியம் | ஸ்ரீ கிருஷ்ணா மஹால், சித்தூர். |
| | | **சங்ககிரி தொகுதி** | |
| 10.11.2024 | காலை 9.00 | சங்ககிரி ஒன்றியம் | ஆர்.கே.எஸ்.மஹால் (மீனாட்சி மண்டபம்), குப்பனூர். |
| 10.11.2024 | காலை 11.00 | மகுடஞ்சாவடி ஒன்றியம் & இடங்கணசாலை நகரம் | சரவணபவன் ஹோட்டல், வைகுந்தம். |
| 10.11.2024 | மதியம் 2.00 | தாரமங்கலம் நகரம் & தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | சிவகாமியம்மாள் திருமண மண்டபம், மோட்டுப்பட்டி ரோடு, எம்.ஜி.ஆர் காலனி, தாரமங்கலம். |

அதுசமயம் பாகநிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA-2) அனைவரும் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

### கோயம்புத்தூர் — குறிச்சி 'சிட்கோ' தொழிற்பேட்டையில் கட்டப்பட்டு வரும்

# தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதியின் கட்டுமானப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

**கோவை, நவ.7-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2024) கோயம்புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 23 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதியின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதிக்கு முதலமைச்சரால் 2022-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

தொழிலாளர்களின் நலனைப் பேணும் வகையிலும், அவர்களுக்கு பணி செய்திடும் இடங்களின் அருகிலேயே தங்கும் வசதியை ஏற்படுத்திடும் வகையிலும், கோயம் புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி கட்டுமானப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.8.2022 அன்று குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் திருப்பூரில் நடைபெற்ற 'தோள் கொடுப்போம் தொழி ல்களுக்கு' மண்டல மாநாட்டில் அடிக்கல் நாட்டப்பட்டது.

**குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் கட்டுமானப் பணிகள்!**

கோயம்புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 1.49 ஏக்கர் நிலப்பரப்பில், 98,812 சதுர அடி கட்டட பரப்பளவில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர் விடுதிக் கட்டடம் மூன்று தளங்களுடனும் கட்டப்பட்டு வருகிறது.

மேலும், இவ்விடுதிக் கட்டடங்கள், "A" மற்றும் "B" ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இதில் "A" பிரிவில் 66 அறைகளும், "B" பிரிவில் 45 அறைகளும், என மொத்தம் 111 அறைகளைக் கொண்டதாகவும் கட்டப்பட்டு வருகிறது. இவ்விடுதியில் 528 தொழிலாளர்கள் தங்கும் வசதியுடன், 2 மின் தூக்கிகள், விளையாட்டுத் திடல், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், மழை நீர் சேகரிப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இவ்விடுதிக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், பணிகளை விரைந்து முடித்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை உட்பட 11மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.7-

சென்னை உட்பட 11 மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, தமிழ்நாட்டில் இன்று குறிப்பிட்ட சில மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்தமிழகம் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, காஞ்சிபுரம், கடலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில்.

7,8 ஆகிய தேதிகளில் 15 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், விருதுநகர், மதுரை, தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நாளை (நவ., 8ம் தேதி) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நவம்பர் 9ம் தேதி 15 மாவட்டங்களில் கனமழை செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வரத. கோபாலகிருஷ்ணன்
### நவம்பர் 7 (2001)



**திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.**

**நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வேல்சாமி
### நவம்பர் 7 (2007)



**இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.**

**மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**